விலை ரூபா 4-00


# ஈழநாடு
EELANADUO
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 மார்கழி 2 ஜ: அவ்வல் பிறை 29 இதழ்: 236

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17-12-1990


(கொழும்பு)

சர்வதேச ஆயுத விற்பனையாளர்களிடமிருந்து இலங்கை சிறிய ரக ஆயுதங்களைப் பெருமளவில் ஏலத்தில் கொள்முதல் செய்துள்ளது. இந்த ஆயுதங்களை அடுத்த சில வாரங்களில் கொழும்பு வரவுள்ளன.

இந்த ஆயுதக் கொள்வனவிற்கான கேள்வி ஒப்பந்தங்களைக் கடந்த மாதம் அங்கீகரிக்கப்பட்ட ஆயுத விற்பனை நிறுவனங்களிடம் இலங்கை கோரியிருந்ததாக இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்க தெரிவித்தார்,

இதில் பல சுடுபடைக் கலங்களும், வெடிமருந்துப் பொருட்களும், தோட்டாக்களும் அடங்குமென்றும் அவர் தெரிவித்தார். (சி)

## பொம்மர், ஷெல் தாக்குதல்
# வேலணையில் நால்வர் பலி!

(வேலணை நிருபர்)

வேலணையிலும், புளியங்கூடலிலும் நேற்றுக் காலை 9-30 மணியளவில் நடந்த பொம்மர் தாக்குதலில், மூவர் பலியானார்கள். ஐந்து பேர் படுகாயம் அடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை இராணுவ முகாமில் இருந்து குடிமனையை நோக்கி ஏவப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒரு சிறுமி பலியானார். ஒருவர் காயமடைந்தார்.

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மக்கள் கடைக்கு அருகில் நடந்த பொம்மர் குண்டுவீச்சில் மாணிக்கம் காண்டீபன் (4 வயது), தேவராசா பிருந்தா (12 வயது) தாயும். மகளும் பலியானார்கள்.

இச்சம்பவத்தில் புருஷோத்தமன் (வயது 10) த. இராசையா (வயது 68), இ. துரைராசா (வயது 45), இ ராஜ்

(4-ம் பக்கம் பார்க்க)

★ பிற நாடுகளிலுள்ள

# இலங்கை தூதரக அதிகாரிகள் வெளிநாடுகளில் தஞ்சம்!

## 22ம் திகதி நினைவு நாள்

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் 22ம் திகதி கரும்புலி லெப். கேர்ணல் போர்க் நினைவுநாளாகவும். மாங்குளம்

(4-ம் பக்கம் பார்க்க)

நமது வெளிநாட்டு செய்திச் சேவை

**சர்வதேச நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களைச் சேர்ந்த சிங்கள, முஸ்லிம் அதிகாரிகள் பலர் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளிலேயே இவர்கள் தஞ்சம் கோரியுள்ளனர்.**

தூதரக அதிகாரிகளில் பலர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்தும் பலர் சம்பளமற்ற லீவில் வேறு நாடுகளுக்கும், கடமைக்காலம் முடிந்தவர்கள் இலங்கை வரவும் மறுத்துள்ளனர்.

கனடாதலைநகர் ஒட்டாவவில் இலங்கைத் தூதரக இரு அதிகாரிகள் இலங்கை செல்ல மறுப்பதால் புதிதாக நியமிக்கப்பட்ட இரு அதிகாரிகளுக்கு விசா வழங்க கனடா மறுத்துள்ளது.

இவ்வாறு வெளிநாடுகளில் அடைக்கலம் கோரிய சிலரது பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளது.திருவாளர்கள் ஹேமந்த. ஜனுப் ஸாகூர்டீன் (வாஷிங்டன்), உமஹிய, கருணரத்ன (நியூயோர்க்) பிலப்பிட்டிய, ஜனுப் ஸகாரியா (கனடா). மென்டிஸ்,லோகுசூரியா (ஆஸ்திரேலியா). [சி]

## தமிழ் டாக்டர்கள் வேலைநீக்கம்

(பண்டத்தரிப்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஜூன் மாதத்திற்குப் பின் கடமைக்குத் திரும்பாத டாக்டர்கள் பலருக்கு வேலை நீக்கக் கடிதங்கள் அனுப்பப்பட்டுவருகிறது புல்மோட்டை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஏ. செல்வநாயகம், திரியாய் அரசினர் மத்திய மருந்தகப் பொதிப்பதுகாரி டாக்டர் எஸ் சதாசிவம் ஆகியோருக்கு

(2-ம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடியில் 3 இராணுவம் பலி

(கொழும்பு)

திருமலையில் குறும்புறுப்பிட்டிப் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர், விடுதலைப் புலிகள் வைத்த கண்ணிவெடியில் சிக்கியதில் 3 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஒருவர் இராணுவ உயர் அதிகாரி எனவும், மற்றைய இருவரும் இராணுவச் சிப்பாய்கள் எனவும் பாதுகாப்புப் படையின் அறிக்கை தெரிவித்தது. (க)

## மணல் ஆற்றுக்கு இராணுவம் விரைவு

[வவுனியா]

மணல்ஆறு [வெலி ஓயா] பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டை முறியடிக்கவ்வன புதிய படைப் பிரிவு இப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் திரு. ரஞ்சன் விஜரத்ன தெரிவித்துள்ளார்:

மணல்ஆற்று பிரதேசத்தில் புலிகளின் விஸ்தரிப்பு நடவடிக்கை இடம்பெறலாம் என்ற அச்சத்தினாலேயே இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்

(4-ம் பகலம் பார்க்க)

## சீனப் பிரதமர் லீ-பெங் இன்று வருகிறார்

(கொழும்பு)

சீனப்பிரதமர் திரு, லீ-பெங் மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று கொழும்பு வருகிறார்.

இவருடன் சீன வெளியுறவு அமைச்சரும், 17 அதிகாரிகளும் இங்கு விஜயம் செய்யவுள்ளனர். இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் கொழும்பில் பலப்படுத்தப்பட்டுள்ளது,

சீனப்பிரதமரின் இந்த விஜயம் அரசியல், பொருளாதார

(2-ம் பக்கம் பார்க்க)

## 90,000 பேர் பதவியிழப்பர்

(கொழும்பு)

நாடு முழுவதும் அரசாங்க சேவையில 80 000 முதல் 90,000 ஊழியர்கள் மேலதிகமாக உள்ளனர். இத்தொகை விரைவில் குறைக்கப்படவுள்ளது.

மேலும் அரசாங்க சேவை ஊழியர்களின் சம்பள அளவுத் திட்டமும் விரைவில் மீளாய்வு செய்யப்படவுள்ளது.

உலக வங்கியின் ஆலோசனைப்படியே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. [சி]

## 41 தமிழர் கைது மூவர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காரைதீவுப் பகுதியைக் கடந்த 11ந் திகதி சுற்றிவளைத்த விசேட அதிரடிப் படையினர், 41 தமிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகள் குறித்து இந்தியா விரைவில் முடிவு

(புதுடில்லி)

தமிழகத்திலுள்ள இலங்கை தமிழ் அகதிகள் குறித்து இந்திய மத்திய அரசு விரைவில் முக்கிய முடிவுகளை மேற்கொள்ளவுள்ளதாக புதுடில்லியில் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பல்வேறு

(2-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகள் பதிவுத் திருமணம்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவின் மகள் துலாஞ்சலி கடந்த மாதம் பிரபல வர்த்தகர் ஒருவரை பதிவுத் திருமணம் செய்து கொண்டார்.

இத்திருமணம் மிக எளிமை

(4ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
# வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் - 1991

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1990 டிசம்பர் 31-ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:**

1. எழுதுபொருட்கள்
2. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
3. அலுவலக தளபாடம்-மரம்
4. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல் அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
5. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதிபண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
6. சகலவகைஹாட்வெயார் பெயின்டுகள், வார்னிஷ்
7. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
8. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
9. வெட்டும்கருவிகள், மண்பாண்டங்கள், உட்பட சமயலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல்திரைச்சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப்பொருட்களும் கண்ணாடிப்பொருட்களும்
12. மரம்
13. கட்டடப்பொருட்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால்துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புகள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகளும்
17. ஆயுர்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19 விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்
20. தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன
22. பைப்புகளும், பைப் இணைப்புகளும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர்கிளாஸ்உற்பத்திகளும்
24. மண்பாண்டப்பொருட்கள், கண்ணாடிப்பொருட்கள், கண்ணாடிகள்
25. தோட்டவேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக உள்உறுப்புகள்

**சேவைகள்:**

1. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்தவேலைகள்
3. றிபிறியேட்டர்கள், எயர் கொண்டிசனர்கள், திருத்தவேலைகளும், பராமரிப்புக்களும்
4. ஸ்டீல் தளபாடங்களின் திருத்த வேலைகள்.
5. மரத் தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்;
6. கதிரைகள் பின்னல்;
7. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்.
8. பெயர்ப் பலகைகள் வரைதலும், பிளாஸ்டிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்.
9. உடைகளைச் சலவை செய்தல்.
10. புத்தகங்களையும், பருவவெளியீடுகளையும் 'பைன்டிங்' செய்தல்.

**பொறியியல் சேவைகள்**

1 மோட்டார் வாகனங்கள் திருத்துதல்,
2. எலக்ரிக் மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
3. குடிசார் பொறியியல் வேலைகள் (கட்டிடங்கள் நிருமாணித்தலும், திருத்த வேலைகளும்)
4. எலக்றிக்கல் வயறிங்
5. நீர் விநியோக சுகாதார தாபித்தல் வேலைகளும் திருத்த வேலைகளும், குழாய் வளைத்தல் வேலைகளும்
6. இரும்பு கிறில்கள், கேற்றுக்கள் உருவமைத்தலும் தாபித்தலும்
7. கட்டடங்கள்/கட்டட சேவைகளுக்கான ஆலோசனைச் சேவைகள்
8. நிலையான மரத் தளபாடங்களை வழங்குதலும், பொருத்துதலும்

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள்/சேவைகள் - 1991' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால்மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் பொருளாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்படவேண்டும்.
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்படவேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும் ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 150/- பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையையும் இணைத்து அனுப்பவேண்டும்.

விலை மனுக்கள் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்தும் விலைமனுக்களைக் கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும்பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்த பொருட்களை சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்,

1. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை,
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6. வங்கியாளர்களின் பெயர்
7. கிடைக்கக் கூடிய கடன் வசதிகள்

**குறிப்பு:** பொறியியல்சேவைகளுக்குவிண்ணப்பிப்பவர்களிடமிருந்து மேலதிக தகவல்கள் கோரப்படும்.

8. பொருட்கள் 3ஐப் பொறுத்தவரையில் பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவராவர்.

அ. ICTAD சிஸ்டத்தின் கீழ் கட்டிடங்களை நிருமாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபைகளில் பதிவுசெய்துள்ளவர்கள் (பதிவுப்புத்தகத்தின் போட்டோ பிரதி/அதற்குரிய ஆவணத்தின் பிரதி/இணைக்கப்படவேண்டும்)

ஆ. இலங்கை கட்டடங்கள் திணைக்களத்துடன் பதிவு செய்துள்ள அல்லது கட்டடங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகுதிகாண் கடிதம் வைத்திருப்பவர்கள் (கட்டடங்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடிதம் சமர்பிக்கப்படவேண்டும்.

இ. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ரூபா 50,000/-மும் அதற்கு மேற்பட்ட தொகைக்கு ஏதாவது ஒற்றை குடிசார்/கட்டட வேலையை செய்து முடித்தவர்கள் சம்பந்தப்பட்ட படிவம் ICTAD/ID/02 (பிரதி) யையும் ICTAD/ID/01 யையும் ICTAD, 123, விஜயராம மாவத்தை, கொழும்பு-7 என்ற முகவரியிலிருந்து கொள்வனவு செய்து அதற்கேற்ப விண்ணப்பிக்க வேண்டும்.

9. உங்கள் தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல பொருட் பொறியியலாளர்கள் கட்டடக் கலைஞர்கள் ஆகியோரின் பெயர், அனுபவங்களை (பொருட்கள் 3 & 7 க்கு மட்டும்) தருக.

**பதிவாளர்**

(A-934) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

(சி-4158)

### EASY ENGLISH

ஆங்கிலம்கற்பிக்கைநூலாகவும் A/L, O/L மாணவர்கள் இலகுவாக ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவியாக வெளிவந்துள்ளது. EASY ENGLISH விலை ரூபாய் அறுபது புத்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளவும்.

(சி-4181)

## யாருடையது

(நாவற்குழி)

நாவற்குழி பாலத்தில் உடைந்த நிலையில் காணப்பட்ட தங்க காப்பின் ஒரு துண்டு கண்டெடுக்கப்பட்டு விடுதலைப்புலிகளின் நுணுவில் பிரதேசப் பொறுப்பாளர் திரு. கோபாலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி நுணுவில் பிரதேச காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். (107)

## சீனப் பிரதமர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
பாதுகாப்பு ரீதியில் இலங்கைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையுமென அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## தமிழ் டாக்டர்கள்

[1-ம பக்கத் தொடர்ச்சி]
வேலைநீக்க அறிவித்தல்கள் திருகோணமலை சுகாதார சேவைப் பணிப்பாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

திருமலையில் ஏற்பட்ட மோதல்களையடுத்து இரு டாக்டர்களும் இடம்பெயர்ந்து வந்து தற்காலிகமாக சங்கானை அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றிவந்தார்கள்.

இம்மாதம் 4-ம் திகதி இவர்களுக்கு வேலைநீக்கக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது (72)

## தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இடங்களிலுமாக சுமார் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் இலங்கைத் தமிழர்கள் அடைக்கலம் தேடியுள்ளனர். இவர்களைத் தமிழக அரசு பராமரித்துவருகிறது.

தமிழக முதல்வர் கடந்த வாரம் பிரதமர் திரு சந்திரசேகரை சந்தித்தபோது இது பற்றி விவாதிக்கப்பட்டதாகவும் அப்போது அதற்கான பிரச்னை குறித்து விரைவில் முடிவொன்றை மத்திய அரசு மேற்கொள்ளுமெனத் தெரிவிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (வி)

# அச்சுறுத்தும் அரசாங்கம்

நாடு பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது எனவே பாதுகாப்புக்கு பெருமளவு படைப்பலம் வேண்டும் என்று அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன பத்திரிகையாளர் மாநாட்டில் ''அச்சுறுத்தல்'' என்ற ஈசுப்பு கொடியை மீண்டும் காட்டியுள்ளார்.

இத்தகைய ''அச்சுறுத்தல் அபாய சங்கை'' நித்தம் ஊதி படை திரட்டுவதில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கடந்த 13 ஆண்டு காலமாகவே பழக்கப்பட்டுவிட்டது.

வளைகுடாவில் ஈராக், தனது நாடும் கடற்பிராந்தியமும் லட்சோப லட்சம் அமெரிக்க துருப்புகளால்சுற்றி வளைத்து ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது. எனவே நாடு எதிர்நோக்கும் சவாலைச் சமாளிக்கப் படைகளைப் பலப்படுத்த வேண்டும் என்று துடிப்பதில் அர்த்தமுண்டு.

ஆனால் எமது அரசோ நாட்டுக்குள் நாட்டையே உருவாக்கி, தன் நாட்டு மக்களுடன் போராடிக் கொண்டு அபாயம்! அச்சுறுத்தல்!! என்று அலறித் துடிப்பதில் அர்த்தமில்லை.

உண்மையில் இன்று நாடு எதிர்நோக்கும் சவால்களும், அச்சுறுத்தல்களும் பல்வேறு ரூபங்களில் அரச தரப்பிலிருந்தே உருவாகி வருகின்றன,

ஆளும் கட்சி ஆதரவாளர்களின் மூலம் எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கு அச்சுறுத்தல்!- அதிரடிப் படையினரால் சிங்கள இளந்தலைமுறையினர்க்கு அச்சுறுத்தல்! அரச முப்படையினராலும், தமிழ்பேசும் இனத்தவர்களுக்கு அச்சுறுத்தல்!!!

இவற்றைவிட, ''இனங்களின் நலன் காக்கும் இனவிகிதாசாரம்'' என்ற நிறக்கலவையால் மக்களைக் கூறு போட்டு இன, மத, மொழி உராய்வுகளை உருவாக்கி, மக்களுடன் மக்களை மோதவிட்டுக் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போலத் தனது பதவிக்காலத்தை நீடிப்பதில் எமது அரசு மிக வல்லரசு!

நிச்சயமாக எமதுநாட்டுக்கு அச்சுறுத்தல், மக்களால் அல்ல, மக்களைக் கட்டிக் காத்து ஆளுவோம் என்று கூறி, நாட்டையே குட்டிச் சுவராக்கிவரும், ஆட்சியாளர்களே இந்த ''அச்சுறுத்தல்கள்'' அனைத்திற்கும் காரணகர்த்தாக்கள் என்பது எல்லோருக்கும் நன்கு புரியும்!

— மயூரன்.

"இலவச நிவாரணம்:

# தலைமையகத்தின் அறிவுறுத்தல்படியே மேற்கொள்ளப்பட்டுவருகின்றன"

## யாழ். உதவி அரச அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"இலவச நிவாரணப்பொருட் பொருள் விநியோகம் சம்பந்தமான நடவடிக்கைகள் யாவும் எமது தலைமையகத்தின் அறிவுறுத்தல்களின்படியே என்னால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வறிவுத்தலுக்கமைய இலவச நிவாரணப் பொருள் விநியோகம் யாழ். ப. நோ. கூ. சங்க கிளைகள் மூலமே வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை உணவு விநியோகம் தொடர்பாக இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

6-12-90 ஈழநாடு இதழில் 'யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட 24 கடைகள் உணவு விநியோகத்திற்குத் தடை' இந்த தடை உத்தரவை இப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிறப்பித்துளளார்' எனச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அத்தகைய தடை உத்தரவு எதுவும் என்னால் பிறப்பிக்கப்படவில்லை.

பாவனையாளர் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படும் போதெல்லாம் பாவனையாளர்களின் சிரமங்களைப் போக்க என்னாலும் யாழ். ப. நோ. கூ சங்கத்தினாலும் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இலவச நிவாரணப்பொருள் விநியோகம் துஷ்பிரயோகமின்றியும், உடனுக்குடனும், பாவனையாளர்களின் நலன் கருதி உடன் கிடைக்க ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படவும், யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் மூலம் செய்யப்படும் முறை உதவுகின்றது,

யாழ். ப. நோ, கூ. சங்கம் சிரமப்படக்கூடிய சந்தர்ப்பங்களில் சில உத்தரவு பெற்ற வியாபாரிகளின் சேவை எம்மால் பெறப்பட்டு வருகிறது.

## இராசி பலன்

17-12-1990

திங்கட்கிழமை

அமாவாசை மு. ப. 10-16 வரை: கேட்டை மு. ப. 8-06 வரை. சித்தயோகம் நல்ல நேரம் பகல் 12.21 முதல் 1.52 வரை. இராகு காலம் காலை 7-52 முதல் 9-22 வரை.

மேடம்: பொருளாதார மேம்பாடு, குடும்பப் பிரிவு. அலைச்சல் மிகுதி, தொழில் கஷ்டம், அகால சோஷனம்.

இடபம்: கடும் உழைப்பு, யோக சிந்தை. கடன் வரவு. குடும்பச் சச்சரவு, பழைய நினைவுகள்.

மிதுனம்; தொழில் லாபம், குடும்ப மகிழ்ச்சி, இனசன வருகை, சகோதர உதவி, கருத்து மோதல்.

கடகம்: புதிய சிந்தனை, மாமனார் உதவி, தொழில் மாற்றம், புதிய படிப்பினை.

சிங்கம்: குடும்பக் கவலை, பெரியோர் ஆசி, புதிய உறவு, கல்வியால் மேன்மை.

கன்னி; விவேகமான முடிவு, காரியத் தடை. சென்ற இடத்தில் விரோதம், மனச்சுமை.

துலாம்; புதுப் பொருள் சேர்க்கை, உல்லாசப் பயணம், புத்திரர் மகிழ்ச்சி, பொதுநல சேவை.

விருச்சிகம்; கடமை தவறுதல், அதிகாரிகள் சினம், புதிய தொழில் வாய்ப்பு, குடும்பக் கஷ்டம்.

தனுசு: காரிய வெற்றி, பயணங்களால் அனுகூலம், விருந்துபசாரம், தொழில் நன்மை, வெற்றி.

மகரம்; எண்ணியவை தடைப்படல், மனப்போராட்டம், தாய்வழி விரோதம், கடன்படல்.

கும்பம்: படபடப்பு. இனசன உதவி, குடும்பக் கருத்து மோதல், எதிரிகள் தொல்லை, பயமிகுதி.

மீனம்: அயலவர் உதவி, மனைச் சிறப்பு, வீட்டில் சுப காரியம், வேண்டியவை கிடைத்தல்.

ஜோஸ்யர்.

வடக்கு-கிழக்கு மக்கள்

# கொழும்பு அகதி முகாம்களில் தஞ்சம்

(மாங்குளம்)

கொழும்பிலுள்ள வடக்குக் கிழக்கு பகுதிகளை சேர்ந்த மக்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

வடக்குக் கிழக்கிலிருந்து கொழும்புக்கு சென்றுள்ள மக்கள் பம்பலப்பிட்டி சரஸ்வதி முகாம், பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் கோவில், கொட்டாஞ்சேனை, விவேகானந்தா மண்டபம் என்பவற்றில் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். (150)

விழிப்புக்குழுவினர்

# மாட்டுத் திருடர்களை மடக்கிப் பிடித்தனர்

(புலோலி)

நாகர்கோவில், குடத்தனை, ஆகிய இடங்களில் மாடுகளைத் திருடிய இருவரை குடத்தனை விழிப்புக் குழுவினர் மடக்கிப் பிடித்தனர்

நாகர்கோவிலைச் சேர்ந்த எஸ். சிவராசா என்பவரின் வீட்டில் கட்டப்பட்டிருந்த மாடு ஒன்றையும், அதன் கன்றுக்குட்டி ஒன்றையும் திருடிக் கொண்டு வந்த இருவர் வழியில் குடத்தனை மேற்கு விழிப்புக் குழுவினரிடம் சிக்கிக் கொண்டனர்.

இவர்களிடமிருந்து மாடுகளை மீட்டதுடன் இவ்விருவரையும் விடுதலைப் புலிகளிடம் விழிப்புக் குழுவினர் ஒப்படைத்தனர். (61)

## கசிப்பு வேட்டை

(நெல்லியடி)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனவு நடவடிக்கையில் ஈடுபட்ட சிலர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கரவெட்டி வட்டப் பிரிவினரால் பிடிக்கப்பட்டனர். (55)

### ஏழாலையில்

(ஏழாலை)

ஏழாலை மத்தி அம்மன் கோவிலடியில் மல்லாகம் பிரதேசப் பொறுப்பாளர் அப்பகுதியின் இளைஞர்களின் உதவியுடன் நடத்திய கசிப்பு வேட்டையில் 3 வீடுகளில் கொள்கலன்களில் காணப்பட்ட கசிப்புகள் தரையில் ஊற்றப்பட்டன.

## ஐம்பது உடைப்பாசல்கள்

(கிளிநொச்சி)

உலக இந்து மகாசபை கிளிநொச்சியில் வன்செயலால் மரணித்த, காயமடைந்த குடும்பத்தினருக்கு 500 உடைப்பார்சல்களை வழங்கியுள்ளது. (83)

கிழக்கு மாகாண

## அகதிகளுக்கு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்களில் அகதிகளாக இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்தில் தனியார் வீடுகளில் தங்கி இருக்கும் கஷ்டமான நிலையிலுள்ள மக்களுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணம் வழங்கவுள்ளது.

நோயாளியிடம்

# மண்ணெண்ணை கேட்கிறார்களாம்

[ஏழாலை]

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இரவு வேளைகளில் அவசர சிகிச்சையின் பொருட்டு செல்லும் நோயாளிகளிடம் விளக்கு எரிக்க மண்ணெண்ணை கொண்டு வருமாறு பணியாட்கள் கேட்கின்றனராம்.

## ஞாபகார்த்த பேருரை

(யாழ்ப்பாணம்)

ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த குழுவும், மானிப்பாய் மகளிர் கல்லூரியும் இணைந்து நடாத்தும் பேராசான் ஹன்டி பேரின்பநாயகத்தின் ஞாபகார்த்தப் பேருரை நாளை மறுதினம் 19-ம் திகதி புதன்கிழமைகாலை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் திருமதி ச. கல்யாணசுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் எஸ். பத்மநாதன் நினைவு நாள் பேருரை நிகழ்த்துவார். யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. என். சபாரட்ணம் நன்றியுரை வழங்குவார். (ரி)

## பலதும் பத்தும்

### பேடன் பவலின் உளவு!

பேடன் பவல், சாரணர் இயக்கத்தின் பிதா என்பது பலருக்கும் தெரிந்திருக்கும். இவர் தன்னுடைய நாட்டுக்கு உளவு வேலை பார்த்ததோடு உளவு வேலை எதிர்ப்பு வேலையிலும் ஈடுபட்டார்.

இவர் ஒருசமயம் ஜேர்மன் இயந்திரத் துப்பாக்கிகள் செயல்படுகின்ற விதத்தைத் தெரிந்துகொள்வதற்காக பெர்லின் நகரை நெருங்கிவிட்டார். இதனைக் கவனித்த ஜேர்மானியப் போர்வீரர் இயந்திரத் துப்பாக்கியை ஏந்தியபடியே அவரை நெருங்கி வந்தார். உடனே பேடன் பவல் ஒரு தந்திரம் செய்தார். பையில் இருந்த பிரண்டியை உருவி, தான் குடிப்பதைப்போன்று ஆடத் தொடங்கினார் அதுடன் நின்றுவிடவில்லை. இன்னொரு போத்தல் பிரண்டியை எடுத்து அப்போர் வீரனுக்கு உபசாரம் செய்தார். சுற்றுப்பயணம் செய்த குடிகாரப் பயணி ஒருவர் தவறி பெர்லின் நகர எல்லைக்குள் நுழைந்துவிட்டதாக எண்ணி, அந்தப் போர் வீரர் அவரை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார்.

- ஞானி

## பரீட்சை முடிந்த பின் வந்த அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - வடக்கு மாகாண நிர்வாக சேவைக்கு ஆட்களை திரட்டுவதற்காக கொழும்பில் நடைபெற்ற பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை முடிந்து 20 நாட்களின் பின் யாழ்ப்பாணம் வந்துள்ளது.

கடந்த மாதம் 25ம் திகதி இப்பரீட்சை கொழும்பில் நடைபெற்றது. இதில் தோற்ற விண்ணப்பித்த வட பகுதி பரீட்சார்த்திகளுக்கே இவ்வாறு அனுமதி அட்டைகள் நேற்று வந்தன.

கொழும்பில் நடைபெற்ற இப்பரீட்சைக்கு வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 90 சதவீத பரீட்சார்த்திகள் தோற்றவில்லையென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## எண்ணெய் விலை குறையும்

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைந்துள்ளதால் இலங்கையில் உடனடியாக எண்ணெய் விலை குறைக்கப்படவுள்ளது.

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்பன இந்த விலைக் குறைப்பில் அடங்கும். (சி)

### பொம்மர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குமார் (வயது 30) ஆகியோர் படுகாயம் அடைந்தனர்.

நணயலில் நடந்த ஷெல் தாக்குதலில் புளியங்கூடலைச் சேர்ந்த செல்வி இ.கார்த்திரா (வயது 10) பலியானார். இச் சிறுமியின் தந்தை இராசையா படுகாயத்திற்கு உள்ளானார். லெட்சுமி (வயது 70) என்பவரும் காயமுற்றார்.

இப்பகுதிகளில் பொம்மர் 15க்கு மேற்பட்ட குண்டுகளை வீசியதில் பல வீடுகள், வர்த்தக நிலையங்கள் முற்றாகச் சேதமடைந்தன.

## இ.போ.ச. ஊழியர்க்கு இன்று சம்பளம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர் சாலை ஊழியர்களின் கடந்த ஆகஸ்ட் மாத சம்பளம் காசோலையாக இன்று காலை முதல் கோண்டாவில் சாலையில் வழங்கப்படவுள்ளது.

நிரந்தர ஊழியர்களுக்கே இக் காசோலைகள் வழங்கப்படவுள்ளதாகவும் தற்காலிக ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதுவதுபற்றி மேலிடம் ஆராய்ந்து வருவதாகவும் விரைவில் இவர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## தி. மு. க. அரசு பதவி விலக வேண்டும்

[சென்னை]

"தமிழ்நாட்டில் இலங்கைப் போராளிக்குழுக்கள் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் தி. மு. க. அரசு துணைபோவதால் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளது. எனவே தி. மு. க அரசு தார்மீகஅடிப்படையில் உடன் பதவி விலகவேணடும்".

மேற்கண்ட தீர்மானம் தமிழ்நாடு ஜனதா தளசோஷலிஸ்ட் கட்சி நேற்று நடாத்திய மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றியது. (க)

## பிரான்ஸிலிருந்து வந்த தமிழ் இளைஞர் கைது

(பம்பாய்)

பிரான்ஸிலிருந்து இந்தியா வந்த இலங்கைத் தமிழ் இளைஞர் பம்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸிலிருந்து பம்பாய்க்கு துப்பாக்கித் தோட்டாக்களையும், 'சமிக்ஞை' கருவிகளையும் கடத்திவந்ததாகக் கூறியே பொலிஸார் இவரை கைது செய்துள்ளனர்.

இலங்கைப் போராளிகளுடன் இவருக்குத் தொடர்பு இருக்கலாமெனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் இவர் இலங்கைத் தமிழர் எனவும் தெரிவித்துள்ளனர். (சி)

## கப்பலில் பணம் வரும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து அடுத்து புறப்படவிருக்கும் குமண கப்பலில் யாழ் மக்கள் வங்கி கிளைக்கு இரண்டரை கோடி ரூபா பணம் ..க வரவுள்ளதாக தெரியவருகிறது. (153)

## ஷெல் தாக்குதல் பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து வளலாய் நோக்கி நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைத் சேர்ந்த இருவர் படுகாயமடைந்தனர். வீடுகள், கடைகள் பலத்த சேதமடைந்தன.

இத்தாக்குதலில் செல்வநாயகம் ரூபி, செல்வநாயகம் சிவகணேசன் என்பவர்கள் படுகாயமடைந்தனர்.

இதேவேளையில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து இயக்கச்சிப் பகுதி நோக்கி நேற்று பலத்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் வீடுகள், கட்டடங்கள் என்பன பலத்த சேதமடைந்தன. [வி-க]

### 41 தமிழர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இளைஞர்களைக் கைதுசெய்து, காரைதீவு சிறிலங்கா அதிரடிப் படை முகாமுக்குக் கூட்டிச் சென்றனர். இவர்களுள் மூவர் அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்ட ஏனைய தமிழ் இளைஞர்களின் நிலைபற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை;

இதேவேளை கடந்த 14-ம் திகதி பேத்தாளை, வாழைச்சேனை பகுதியை ரெலோ சுற்றிவளைத்து 6 பேரை கைது செய்து இராணுவ முகாமில் ஒப்படைத்தனர்.

மேலும் திருமலை கட்டை பறிச்சானில் 13ம் கட்டையடியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரை ரெலோ கைதுசெய்து சிறிலங்கா இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளது. (வி)

## 32 கோடி ரூபா அரசுக்கு நஷ்டம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கிலிருந்து இவ் வருடம் வரிகள் மூலம் 32 கோடி ரூபா கிடைக்குமென அரசு எதிர்பார்த்திருந்தது என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பிரச்னை நடைபெறாதிருந்திருந்தால் இந்த நிதி அரசுக்கு கிடைத்திருப்பதுடன் யுத்தத்திற்கு செலவழித்த பல நூறுகோடி ரூபாவும் தவிர்க்கப்பட்டிருக்கும்.

எந்தவித அர்த்தமுமில்லாத யுத்தத்திற்கு பலகோடி ரூபா செலவிடப்படுவதாகவும் அந்த அதிகாரி கவலை தெரிவித்தார். (சி)

## 5 அரசு திணைக்களங்கள் விரைவில் மூடப்படும்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் இயங்கி வரும் ஐந்து அரசு திணைக்களங்கள் விரைவில் மூடப்படவுள்ளன. இதற்கான அறிவித்தல் எந்நேரமும் வெளியிடப்படலாம்.

இவ்வாறு அரசாங்க பொருட்கள் விநியோக திணைக்களம், வீடமைப்பு திணைக்களம், காணி திணைக்களம், விற்பனைத் திணைக்களம், சரக்குகள் கொள்வனவு திணைக்களம் ஆகியவையே மூடப்படவுள்ளனவாகும்.

உலக வங்கியின் ஆலோசனையின் பேரிலேயே இந்த திணைக்களங்கள் மூடப்படவுள்ளதாக செப்டெம்பர் மாத இலங்கைக்கான உலக வங்கி அறிக்கை தெரிவித்துள்ளது. (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி கார்த்திகேசு சின்னத்தங்கம்

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி கார்த்திகேசு - சின்னத்தங்கம் 13-12-90 அன்று காலமானார். இவர் காலம் சென்ற கார்த்திகேசுவின் அருமை மனைவியும், காலம் சென்ற கனகரட்ணம், சந்திராதேவி (கனடா), பாலசிங்கம் (ஜேர்மனி), தருமலிங்கம் ஆகியோரின் அருமைத்தாயாரும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, நாகபூசணி, சோமசுந்தரம், கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அருமைச்சகோதரியும் உதயசுந்தரம் (கனடா), விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், நடராஜா (மலேசியா) வின் அன்பு மைத்துனியும், சகிதன், குகவதனி, ஜெயந்தினி, சுதர்சினி (கனடா), ருசிதரன், ருசிகுமார், தர்சிகா, தர்மினி, துவிகரன் ஆகியோரின் அருமைப் பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நீர்வேலி குடும்ப மயானத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் தகனம் செய்யப்படும்.

தகவல்: கா. தருமலிங்கம்;

நீர்வேலி பத்தி,
நீர்வேலி.

(சி-4184)

### ஜனாதிபதி

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யான முறையில் நடைபெற்றது. துலாஞ்சலி பிரபல வர்த்தகர் ரேஹான் ஜெயக்கொடி என்பவரை நவம்பர் மாத நடுப்பகுதியில் பதிவுத் திருமணம் செய்தார்.

இப்பதிவுத் திருமணவைபவத்தில் ஜனாதிபதி, திருமதி ஹேமா பிரேமதாஸா வினது நெருங்கிய உறவினர்களே கலந்து கொண்டனர். (சி)

### மணல் ஆற்றுக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை நேற்றுமுன்தினம் வவுனியாவிற்கு விஜயம் செய்த அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன பிறப்பித்துள்ளதாகவும் அரசு தரப்பு செய்திகள் நேற்றுத் தெரிவித்தன. (சி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/160306/81.

## ஆடம்பரமற்ற முறையில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

தென் தமிழீழ மக்களின் துயர் துடைக்கும் முகமாக இம்முறை நத்தார் பண்டிகையையும், புதுவருவருடப் பிறப்பையும் ஆடம்பரமற்ற முறையில் அனுஷ்டிக்கும்படி யாழ். ஆயர் இல்லம் கத்தோலிக்க மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்திலுள்ள தேவாலயங்களில் நடைபெற்ற ஆராதனையின்போது மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளது.

நத்தார் பண்டிகை புதுவருடதினத்தையொட்டி ஆடம்பரமாக செலவு செய்யும் பணத்தை தென்தமிழீழ மக்களின் துயர் துடைக்க தாராளமாகக் கொடுத்துதவும்படி யாழ். ஆயர் இல்லம் தமது வேண்டுகோளில்மேலும் தெரிவித்துள்ளது.

### கருத்தரங்கு

(யாழ்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வங்கி முகாமையாளருக்கான கருத்தரங்கு இன்று மாலை 3-00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித்தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (வி)

### 22ம் திகதி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இராணுவ முகாம் தகர்ப்பு வெற்றி நாளாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தியுள்ளனர். (வி)

### பொம்மர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வளலாய்ப்பகுதிகளிலும் நேற்று இருபொம்மர் விமானங்கள் குண்டுகளை வீசியதில் பலர் படுகாயமடைந்ததுடன் பல வீடுகளும் தரைமட்டமானதாகத் தெரியவந்துள்ளது. (வி)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தென் தமிழீழ மக்களின் நிவாரண நடவடிக்கைகள் பற்றியும், இன்றைய பாடசாலைகளின் அடிப்படைப் பிரச்சனைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட கல்விப் பிரிவு, உதவிக் கல்விப் பணிப்பாளர், கொத்தணி அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும் தவறாது நாளை செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணிக்கு யா/ வட இந்து மகளிர் கல்லூரிக்கு சமுகம் தருமாறு கேட்டுள்ளனர்.